# தேவார ஒளிநெறி

## சம்பந்தர்

(மூன்றும் தொகுதி)

★



கழக வெளியீடு

கழக வெளியீடு: ஏ0க



உ

திருச்சிற்றம்பலம்

# தேவார ஒளிநெறி

## [I சம்பந்தர்]

மூன்றாந் தொகுதி

[ஆராய்ச்சிப்பகுதி: தலைப்பு 266 - 466]



தணிகைமணி

ராவ்பகதூர், வ. சு. செங்கல்வராய பிள்ளை, எம்.ஏ.,

எழுதியது



திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி. :: சென்னை-1.

First Edition: March., 1954.



*Published by*

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS
PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1/140, BROADWAY, MADRAS - 1.

*Head Office :*

24, EAST CAR STREET, THIRUNELVELI.

Appar Achakam, 2/140, Broadway, Madras - 1. C. 500.

# பதிப்புரை

"தேவார ஒளிநெறி" எனப்படும் 'திருநெறியதமிழாம்' திருமுறை விளக்கப் பெருநூல் - திருவருள் நூல், திருவாளர், தணிகைமணி, **ராவ்பகதூர் வ. சு. செங்கல்வராய பிள்ளை, எம். ஏ.,** அவர்களால் இறைவனருள் துணைக்கொண்டு யாக்கப்பெற்றது.

இந்நூல் ஆளுடைய பிள்ளையாராகிய திருஞானசம்பந்தப் பெருமானார் பாடியருளிய முதல் மூன்று திருமுறைகளுள் உள்ள திருமறைப் பேருண்மைகளின் சிறப்பு முதலியன திகழும் திருமொழிகளைப் பல்வேறு தலைப்புக்களாகத் தொகுத்து அகரவரிசையில் அமைத்துள்ளார்கள். அத்தொகை நானூற்று அறுபத்தாறாகும். அவற்றைத் தொகுதியாகப் பிரித்து வெளியிடுங்கால் மூன்று தொகுதிகளாயின. முதல் தொகுதி நூறு தலைப்புக்களைக் கொண்டது. அகரமுதல் சீகரம் வரை அமைந்திருக்கிறது. இரண்டாவது தொகுதி நூற்றறுபத்தைந்து தலைப்புக்களைக் கொண்டது. சீகரமுதல் தேகரம்வரை அமைந்துள்ளது.

இம்மூன்றும் தொகுதி இருநூற்றொரு தலைப்புக்களைக் கொண்டது. தே முதல் ஜ வரை அமைந்துள்ளது. இம்மூன்று தொகுதிகளையும் திருவருள் துணைக்கொண்டு சித்தாந்த சைவர்கட்கும் செந்தமிழன்பர்கட்கும் அருட்பெருங் கருவூலமாய்த் திருமன்றக் களஞ்சியமாய்ப் பெறற்கரும்பெருஞ் செல்வமாய் ஆசிரிய அருட்பெரியாரவர்கள் ஆக்கித் தந்துள்ளார்கள். ஏனைய சிறப்புக்களை இரண்டாம் தொகுதிப் பதிப்புரையின்கண் காணலாம்.

இத்தொகுதிகள் அரும்பெரும் முயற்சியும், ஆண்டவன் அருட்டுணையும், பல்லாண்டுகளாக ஓவாதுழைக்கும் உழைப்பும், உலகத் தொண்டே உறுதிதரும் என்னும் ஊக்கமும் ஒருங்கியைந்த மேலோர்க்கன்றி வேறெவர்க்கும் எத்துணையும் ஏலா எனும் உண்மையும் ஒருங்கு திருவுருக்கொண்டவையாகும்.

இவ் அருட்பெரியார் திருத்தொண்டினை முற்றுவிப்பது, செயற்கரும் செயலாம் திருக்கோவில் எடுப்பிப்பது, சிறப்பொடு பூசனை செய்விப்பது முதலிய திருத்தொண்டினும் மிக்கதாகும்.

இவர்கள் ஆக்கியுள்ள ஆளுடைய அரசர், ஆளுடைய நம்பி என்னும் இரு பெருமுதலிகள் தேவாரக் குறிப்புக்களும் வெளிவர, அன்பர்கள் இம்மூன்று தொகுதிகளையும் வாங்கியும் வாங்குவித்தும் துணைபுரிவார்களாக:

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்

# முன்னுரை

தேவார ஒளிநெறியின் இரண்டாம் பகுதி தலைப்புக்கள் 101 முதல் 265 முடிய (சி முதல் தே வரையில்) 1950-ஆம் ஆண்டின் இறுதியில் வெளிவந்தது. மூன்றும் பகுதியும் முடிவுப் பகுதியுமாகிய இப் பகுதியில் தலைப்புக்கள் 266 முதல் 466 முடிய (தே முதல் ஜெ வரையில்) வெளிவந்துள. இத் தலைப்புக்களின் விவரங்களை 'ஒளிநெறி' முதற் பகுதியில் பக்கம் xxvii, முதல் xiv வரையில் அகராதி முறைக் குறிப்புக்களிற் காணலாகும். அநுபந்தமாக ஒரு சுருக்கச் சொல்லகராதியும் சேர்க்கப்பட்டுள்ளது.

தேவாரத்தின் பெருமை, தேவாரப் பதிகங்கள்—பாடல்கள் இவற்றின் பாகுபாடு—விசேடம், தேவாரம் பாடுந் தொண்டர்கள—கேட்கும் தொண்டர்கள் அடையும் பேறு, அக்காலத்துப் பழக்க வழக்க ஒழுக்கங்கள், வாத்திய வகைகள், திருவிழாக்கள், வழிபாட்டினால் வரும் பயன், இயற்கை விளக்கம், உயிர் வகைகள் முதலிய பல தலைப்புக்கள் இப் பகுதியில் வருகின்றன. நூலும் முடிகின்றது.

இவ்வாறே அப்பர் பெருமான் அருளிய தேவார ஆராய்ச்சி வெளியீட்டையும் முடித்துத் தருமாறு 'செய்தொழில் பேணியோர் செல்வதாம்' செம்மலின் திருவருளை நாடிப் பணிகின்றேன்.

செந்தமிழின் ஆக்கத்தையும் பெருக்கத்தையும், சைவத்தின் நிலைபேற்றையும் தமது குறிக்கோளாகக் கொண்டு, இத் திருப்பணியை மேற்கொண்டு, இனிது முடித்து உலகுக்குத் தந்துள்ள 'திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகத்தார்,'

> நிறைபுகழ் விளங்கி நீணிலத் திலங்கப்
> பிறைவளர் சடைமுடிப் பெருந்தகை அருள்வரே.

292, லிங்க செட்டித் தெரு,
சென்னை-1,
19—2—1954.

**வ. சு. செங்கல்வராய பிள்ளை.**

# தேவார ஒளிநெறி

## 266. தேவதைகள்



## 267. தேவர் - அமரர் முதலிய கணங்கள்

### (1) பொது

## (2) சிறப்பு

அக்கினி

(*"ஒருக்காலர்கள் இருக்கான் மலர்தூவி"—சுந்த. தேவா-கேதாரம்.)

# (3) தேவர், தானவர், சித்தர்களைப்பற்றிய செய்திகள்

## (1) தேவர் இறைவனிடம் ஓலமிடும் சமயமும் இடமும் (அசுரர் நெருங்கும்போது என்பது)

சென்றுபல வென்றுலவு புன்றலையர் துன்றலொடும் ஒன்றியுடனே நின்றமரர் என்றும் இறைவன்றனடி சென்றுபணி கின்ற நகர்தான்... கயிலைமலையே 326-7

## (2) தேவர்கள், சித்தர்கள் பூஜை வழிபாடு செய்வது

'தலங்கள்—வழிபட்டுப் பேறு பெற்றோர்'—என்னுந் தலைப்பு 238-ம் பூஜை - தேவர் பூஜை, வழிபாடு என்னுந் தலைப்பு 345-6-ம் பார்க்க.)

## (3) தேவர் தமது சித்தம் தெளியாத காரணம்

இயங்குகின்ற இரவி திங்கள் மற்றுநல் தேவ ரெல்லாம் பயங்களாலே பற்றி நின்பால் சித்தந் தெளிகின்றிலர் 50-2

## (4) தேவர் தோத்திரம் செய்யும் பாஷை (மொழி)

கல்லால் நிழல்மேய கறைசேர் கண்டாஎன் றெல்லா மொழியாலும் இமையோர் தொழுதேத்த 85-1

## (5) தேவர் பூமழை பொழிதல்

வானவர்...இசைபாடி விரைமலர்கள் சொரிந்தேத்தும் பாதத்தீர் 217-1
வேத வேள்வியு ளெங்கும் விண்ணவர் விரைமலர் தூவ 41-2

## (6) தேவர் முதலியோர் அடுக்காகச் சொல்லப்பட்ட இடங்கள்

சுரர் மாதவர் தொகு கின்னரர்......நரரான பன்முனிவர் 12-4
தேவர்கள் தானவர் சித்தர் விச்சாதரர் கணத்தோடும் 7-4
விண்ணவர் தானவர் முனிவரொடு மண்ணவர் 114-6

## (7) தேவர், வானவர், அமரர்

### (i) தேவர் வேறு—அமரர் வேறு

தேவரும் அமரர்களும்...யாவரும் அறியாததோர்...தழலுருவினர் 214-6

### (ii) அமரர் வேறு—வானவர் வேறு

அண்ட வானவர்களும் அமரரும்......பணிய ஆலம் உண்ட மா கண்டனர் 347-7
வானுளார் பரச அந்தரத் தமரர்கள் போற்ற......பலபல வேட முடையவர் 376-4

### (8) தேவரும் சமயங்களும்

ஆறு சமயம் ஓதியு முணர்ந்து முளதேவர் 329-5

### (9) தேவரும் திருநீறும்

மேலுறை தேவர்கள் தங்கள் மெய்யது வெண்பொடி நீறு 202-9
வானவர் மேலது நீறு 202-1

### (10) தேவரும் வேதமும்

உம்பர் வானவர் புகுந்து வேதத்தின் இசைபாடி 217-1
தூய வானவர் வேதத் துவனியே 372-1
மறையொலி வாய்மொழியால் வானவர் மகிழ்ந்தேத்த 118-5
வேதமொடு வேள்வி பலவாயின .....ஓதியு முணர்ந்து முளதேவர் 329-5

### (11) தேவரும் வேள்வியும்

வேள்வி பலவாயின ......ஓதியு முணர்ந்து முளதேவர் 329-5

## (4) தேவர் ஊர்

இமையவர் புரம் 22-2
உம்பரவர் கோன் நகரம் 335-3
ஓங்கமராவதியோர் 265-11

## (5) தேவ தரு

(கற்பக தரு—'மரங்கள்' என்னுந் தலைப்பு 354-1-ல் 'கற்பகம்' என்பதைப் பார்க்க.)

அமரர் தரு—ஒப்பிலின் றமரர் தருவதே 374-7
கற்பகம்—பூங் கற்ப(க)ம்-கற்பத்தார் மருவும் இந்திரனூர் 210-3

## (6) தேவலோகம்

"உலகங்கள்"—தலைப்பு 32-(2) பார்க்க.

## (7) தேவலோக நிதி

தெரிலையா இருநிதி 128

# 268. தேவாரம்

குறிப்பு: தேவாரத்தைக் குறிக்குஞ் சொற்கள் வராத பதிகங்கள், கிடையாப் பதிகங்கள்: 28, 53, 115, 119, 145, 217, 232, 272, 352, 375, 382.

(பதிக எண் மாத்திரம் குறிப்பிட்ட இடங்களில் பாட்டின் எண்-(11) அல்லது ஈற்றுச் செய்யுள் எனக் கொள்க.)

## (1) தேவாரத்தை அதன் சிறப்பைக் குறிக்குஞ் சொற்கள், சொற்றொடர்கள்

---

* சங்கமலி செந்தமிழ்கள் என்பதற்கேற்ப சங்க இலக்கிய அழகெல்லாம் இவர் தமிழிற் செறிந்து கிடக்கின்றன.

## (2) தேவாரத்தின் பெருமை; தேவாரம் வல்லவரின் பெருமை

### (i) தேவாரத்தின் பெருமை



### (ii) தேவாரம் வல்லவரின் பெருமை



## (3) தேவாரத்தில் விருப்பமுள்ளவர் - பாடவல்ல தொண்டர்கள் - அடையும் பேறு

ஞானசம்பந்தன் சொன்ன இன்பாய பாடலிவை பத்தும்.........விரும்பிக் கேட்பார் தம்பால தீவினைகள் போயகலும் நல்வினைகள் தளரா அன்றே 207
ஞானசம்பந்தன்........சொன்ன தமிழ்மாலை வாழுந் துணையாக நினைவார் வினையிலரே 46
ஞானசம்பந்தன்........தமிழ்மாலை ஆதரித்திசை கற்று வல்லவர் சொலக் கேட்டுகந்தவர் தம்மை வாதியா வினை மறுமைக்கும் இம்மைக்கும் வருத்தம் வந்தடையாவே 242
ஞானசம்பந்தன் நாவின் இன்னுரை வல்ல தொண்டர் வானம் ஆளவல்லர் வாய்மையாகவே 237
ஞானசம்பந்தன செந்தமிழ் விரும்புவா ரவர்கள்போய் விண்ணுல காள்வரே 282
ஞானசம்பந்தன...பேணி உருகா உரைசெய்வார் உயர்வான் அடைவாரே 83
தமிழ்மாலைகள் மாலதாய் மகிழ்வோடும்.....இசைபாட வல்லார்கள் போய் இறைவனோ டுறைவாரே 240
மாலையீ ரைந்தும் இருநிலத்தில் இரவும் பகலும் நினைந்தேத்தி நின்று விம்மா வெருவா விரும்பும் அடியார் விதியார் பிரியார் சிவன் சேவடிக்கே 175

## (4) தேவாரத்தைப் பாடிப் பரவி உய்யுங்கள் என்ற உபதேசம்

ஓதுவீர் கொள்மின் தமிழ்கெழு விரகினன் தமிழ்செய் மாலையே 277
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை 127-12
கொச்சை வேந்தன் கச்சிக்கம்பம் மெச்சுஞ் சொல்லை நச்சும் புகழே 299
ஞானசம்பந்தன் சொற்பகரும் பழிநீங்கவே 305
ஞானசம்பந்தன் பழிகள்தீரச்...சொன்னசொல் பாவநாச மாதலால்... கொண்டேத்துமின்...வீரட்டானஞ் சேர்துமே 236
ஞானசம்பந்தன் ...தமிழ்மாலை வலங்கொடே யிசை மொழியுமின் மொழிந் தக்கால் மற்றது வரமாமே 244
ஞானசம்பந்தன் பாடல்கொண் டோதி வாழ்மினே 163
ஞானசம்பந்தன் பாடல்பத்தும் பரவி வாழ்மினே 27
ஞானசம்பந்தன் பாடலாயின பாடுமின் பத்தர்கள் பரகதி பெறலாமே 243
ஞானசம்பந்தன் மாலைகொண் டேத்தி வாழுநும் பந்தமார்வினை பாறிடுமே 263
ஞானசம்பந்தன் வாய் நவின்றெழு மாலைகள் பொய்த்தவம் பொறிநீங்க இன்னிசை போற்றி செய்யும் மெய்ம் மாந்தரே 295
ஞானசம்பந்தன தமிழ்வல்லவர் அடிபேணுதல் தவமே 10

ஞானசம்பந்தன தின்தமிழ் பத்தும் பாடிப் பரவுமே 56
தமிழ் விரகன் வழிமொழிகள் மொழிதகையவே 325-12
பந்தன் ஆய்ந்த பாடலால் வேந்தன் அன்னியூர் சேர்ந்து வாழ்மினே 96
வீழிமிழலை மேல் தாழும் மொழிகளே 92

## (5) தேவாரம் எழுதுவோர் அடையும் பயன்

ஞானசம்பந்தன் ஒண்மாலை வரைக்குந் தொழில் வல்லவர் நல்லவர் தாமே 30

## (6) தேவாரம் சொல்பவரும், கேட்பவரும், கற்பவரும் அடையும் பயன்

ஞானசம்பந்தன்...ஆநரமர்ந்தானை வல்லதோ ரிச்சையினல் வழிபாடிவை பத்தும் வாய்க்கச் சொல்லுதல் கேட்டல் வல்லார் துன்பந் துடைப் பாரே 105

ஞானசம்பந்தன்......இடைமருதில் ஏத்துபாடல் இவைபத்தும் சொல்லு வார்க்குங் கேட்பார்க்கும் துயரமில்லையே 192

ஞானசம்பந்தன் சொன்ன இன்பாய பாட லிவைபத்தும் வல்லார் விரும்பிக் கேட்பார் தம்பால தீவினைகள் போயகலும் நல்வினைகள் தளரா அன்றே 207 (குறும்பலா)

ஞானசம்பந்தன் ஞானத்தமிழ் நன்குணரச் சொல்விடல் கேட்டல் வல்லோர் தொல்லை வானவர் தங்களொடும் செல்குவர் சீரருளாற் பெறலாஞ் சிவலோகமதே 117 (பிரமபுரம்)

ஞானசம்பந்தன்...பரவு பாடல்பத்தும் கருத்துணரக் கற்ருரும் கேட்டாரும் போய் விண்ணோ ருலகத்து மேவி வாழும் விதியதுவே யாகும் வினை மாயுமே 59 (பெண்ணாகடம்)

ஞானசம்பந்தன்...........புனைந்தேத்தும் காரோணத்து வண்டமிழ் சொல்லுவார்க்கும் இவை கேட்பவர்க்கும் துயரில்லையே 252 (நாகை)

ஞானசம்பந்தன்...மாலையீரைந்தும் உரைப்பவர் கேட்பவர் உயர்ந்தோர்
ஞானசம்பந்தன்......மாலை யீரைந்தும் உரைப்பவர் கேட்பவர் உயர்ந்தோர் சுற்றமுமாகித் தொல்வினை யடையார் தோன்றுவர் வானிடைப் பொலிந்தே 381 (கோணமலை)

ஞானசம்பந்தன் வாய் நவிற்றிய தமிழ்மாலை ஆதரித்திசை கற்றுவல்லார் சொலக் கேட்டுகந்தவர் தம்மை வாதியாவினை மறுமைக்கும் இம்மைக் கும் வருத்தம்வந் தடையாவே 242 (வலஞ்சுழி)

ஞானசம்பந்தன தமிழ்மாலை கூறுவாரையுங் கேட்க வல்லாரையும் குற்றங்கள் குறுகாவே 239 (அம்பர் மாகாளம்)

## (7). தேவாரம் கேட்பவர் அடையும் பயன்; தேவாரம் கேட்கும் முறை

ஞானசம்பந்தன் தமிழ்பத்தும் யாழின்னிசை வல்லார்சொலக் கேட்டாரவ ரெல்லாம் ஊழின்மலி வினைபோயிட உயர்வான் அடைவாரே 11
ஞானசம்பந்தன்........தமிழ்மாலை ஆதரித்திசை கற்றுவல்லார் சொலக் கேட்டுகந்தவர் தம்மை வாதியாவினை மறுமைக்கும் இம்மைக்கும் வருத்தம்வந் தடையாவே 242
ஞானசம்பந்தன் மருவுபாடல் இன்னிசையா லிவைபத்தும் இசையுங்கால் ஈசனடி யேத்துவார்கள் தன்னிசையோ டமருலகில் தவநெறிசென் றெய்துவார் தாழாதன்றே 130

## (8) தேவாரம் பாடிப் பரவித் திரிதல்

ஞானசம்பந்தன்......திருநாரையூரான்மேல் பாடிய தண்டமிழ் மாலைபத்தும் பரவித் திரிந்தாக வாடிய சிந்தையினார்க்கு நீங்கும் அவலக் கடல் தானே 365

## (9) தேவாரத்தை ஏத்தினவர் தமருக்கும் இன்பம்

ஞானசம்பந்தன்......தமிழ்மாலை......வையகத்து ஏத்த வல்லா ரவர்க்கும் தமருக்கும் ஊழியொரு பெருமின்பம் ஓக்கும் உருவும் உயர்வாமே 364

## (10) சம்பந்தப்பெருமான் தேவாரம் பாடிய கருத்து, வழி, முறை

கயிலைநன் மயேந்திரரும் ஆனஆரூராதி யானைக்காவை ஞானசம்பந்தன் தமிழ் சொல்லுமே 367
காழியுளா னினயே னினயே தாழிசயா தமிழாகரனே 375
சம்பந்தன் தாழ மனத்தா லுரைத்த தமிழ்கள் 195
சம்பந்தன் வீழிமிழலைமேல் தாழ மொழிகளே 92
ஞானசம்பந்தன்......சிந்தையாற் சொன்ன செந்தமிழ் 302
ஞானசம்பந்தன் நல்ல பண்பினால் ஆய சொல்லின் மாலை 310
ஞானசம்பந்தன் நன்மையா லேத்திய பத்து 204
ஞானசம்பந்தன் நாவினாற் சொல்லு மாலை 161
ஞானசம்பந்தன் படியாற் சொன்ன பாடல் 17
ஞானசம்பந்தன் பரிந்துரைத்த பத்து 132
மூனமுனிவன் இடுபறை யொன்ற அத்தர் பியன்மேல் விருந்து இன்னிசையா லுரைத்த பனுவல் 220

ஞானமுனிவன் தானுறு கோளு நாளும் அடியாரை வந்து நலியாத வண்ணம் உரைசெய் ஆனசொன்மாலை 221
தமிழ்விரகன மொழி பத்தியில் வருவன பத்து 124
நண்ணு ருட்க......ஞானசம்பந்தன் சொன்ன பண்ணூர் பாடல் 64
பந்தன்...நறையூரின் நம்பனவனை ஈனமிலாத வண்ணம் இசையா லுரைத்த தமிழ்மாலை பத்து 223
பிஞ்ஞகன் கழல்பேணியே மெய்த்தவத்து நின்றோர்களுக் குரைசெய்து நன்பொருள் மேவிட வைத்த சிந்தையுள் ஞானசம்பந்தன் வாய்நவின் றெழு மாலைகள் 295
மானமர் கரமுடையீர் உமைவாழ்த்திய ஞானசம்பந்தன தமிழே 355

## (11) தேவாரம் கற்கும் முறை - ஓதும் முறை.

### 1. அகலிடம் எங்கும் ஏத்த

அகலிட மெங்கும் நின்றேத்த வல்லார் 268

### 2. அழுது நகுதல்

பத்தும் பாடியே தொழுது பொழுது தோத்திரங்கள் சொல்லித் துதித்துநின் றழுதும் நக்தும் அன்பு செய்வா ரல்லல் அறுப்பாரே 73

### 3. ஆதரித்துச் சொல்லுதல்

ஆதரித்து இசை கற்றுவல்லார் சொல 242

### 4. ஆம்படி (ஆகும்-கூடிய-அளவு) ஏத்த

தமிழ்மாலைகொண்டு ஆம்படி இவையேத்த வல்லார்க்கு 260

### 5. ஆர மொழிதல் (நிரம்ப)+(ஆரம் மொழிதல்)

ஞானசம்பந்தன் தமிழார மொழிவார்கள் மூவுலகும் பெறுவார்களே 147

### 6. இசையுடன் ஓதுதல்

அருந்தமிழ்கள் பத்தும் இசைவல்லவர் 250
இசையாற் பாடல் இவைபத்தும் உறுமா சொல்ல 25
இடைச்சுரம் ஏத்திய இசையொடு பாடல்இவை சொல வல்லவர் 78
இன்னிசையால் இவைபத்தும் இசையுங்கால் 130
ஏழேஏழே நாலேமூன் றியலிசை யிசையியல்பா 126
ஞானசம்பந்தன் உரைநல்ல தமிழின் பாடலொடு பாடுமிசை வல்லவர்கள் 327

## 7. இசைபாடி யாடுதல்



## 8. இசைவந்தபடி பாடுதல்



## 9. உரியதோர் இசையிற் பாடுதல்



## 10. சம்பந்தர் ஏத்திய இசையோடு சொல்லல்



## 11. வழங்கும் இசைகூடும் வகையிற் பாடுதல்

## 12. இட்டமாப் பாடுதல்

இட்டமாப் பாடுவார் 294

## 13. இரவும் பகலும் ஏத்துதல்

செஞ்சொன்மாலை யிரவும் பகலும் பரவி நினைவார் 216
மாலையீரைந்தும் இருநிலத்தில் இரவும் பகலும் நினைந்தேத்தி நின்று
விம்மா வெருவா விரும்பும் அடியார் 175

## 14. இருந்து பாடுதல்

தமிழ்பத்தும் கொண்டு வைகி இசைபாட வல்லார் 3

## 15. உண்மையினல் ஏத்துதல்

மாலை...பத்தும் உண்மையினல் நினைந்தேத்த வல்லார் 79

## 16. உணர்ந்தேத்துதல்

நூலிவை பத்தும் உணர்ந்தேத்த வல்லார் 324

## 17. உயருமாறு ஓதுதல்

செந்தமிழுரை உயருமா மொழிவார் 185

## 18. உரு எண்ணி ஓதுதல் (உருப்போடுதல்-பலமுறை ஓதுதல்)

ஒண்சொலி னிவைமாலை *உரு எ(ண்)ணத் தவமாமே 118
செந்தமிழ்கள் †உரு...ஞானம் உண்டாம் 156

## 19. உருகிப் பாடுதல்

ஞானசம்பந்தன்......பேணி உருகா உரைசெய்வார் உயர்வான் அடைவாரே 83

## 20. உற்றுணர்க

பத்தும் உயர்வாம் இவையுற் றுணர்வார்க்கே 38

## 21. உற்று உரை செய்க

பத்திவை உற்றுரை செய்பவர் 267

---

* உரு ஏற்றல்—பலமுறை சொல்லுதல்; "உருவேறவே ஜெபித்து" திருப்புகழ் 355.

† "நாமத்தை அற்பகலா உருவேற்ற"—திருவாரூர்க் கோவை 106.

## 22. ஊனமின்றி ஓதுதல்

பத்தும் ஊனமின்றி யுரைசெய வல்லவர் 174

## 23. எங்கும் ஓதுதல்

ஞானசம்பந்தன் சொன்ன தமிழ் புந்தியால் அகலிடம் எங்கும் நின்றேத்த வல்லார் 268

தண்டமிழ் பத்தும் எங்கும் ஏத்த வல்லார்கள் 228

மாலைகள் பத்தும் ஊரூர் நினைவார் 37

## 24. எம் பந்தம் எனக் கருதி ஓதுதல்

சாய்க்காட்டுப் பத்தினையும் எம் பந்தம் எனக்கருதி ஏத்துவார் 177

## 25. எழுதுங் தொழில் மேற்கொள்ளுதல்

ஞானசம்பந்தன் ஒண்மாலை வரைக்குந் தொழில் வல்லவர் 30

## 26. என்றும் பாடுதல்

ஞானசம்பந்தன் தமிழ்மாலைபற்றி யென்றும் இசைபாடிய மாந்தர் 2

## 27. கோலத்தாற் பாடுதல்

ஞானசம்பந்தன் சொல் கோலத்தாற் பாடுவார் 286

தமிழ்மாலை கோலத்தாற் பாட வல்லார் 80

## 28. கோழையா ஓதுதல்

ஞானசம்பந்தன கருதுபாடல் கோழையா அழைப்பினும் கூடுவார் நீடுவானுலகினூடே 349

## 29. சித்தஞ்சேரச் செப்புதல்

ஞானசம்பந்தன் சொல் சித்தஞ் சேரச் செப்பு மாந்தர் 65

## 30. சிந்தனையால் உரைத்தல்

சம்பந்தன்......பாடல் சிந்தனையால் உரைசெய்வார் 193

## 31. சிந்தைசெய்து பாடுதல், மகிழ்தல்

ஞானசம்பந்தன் சொல் சிந்தைசெய்து பாடவல்லார் 66

சிந்தையால் மகிழ்ந்தேத்த வல்லார் 307

32. சொல்வண்ண மூன்றும் தமிழில் தெரிந்து பாடுதல்

சொல்வண்ண மூன்றுங்* தமிழிற் றெரிந்து இசைபாடுவார் 211

33. செவிக்கு இனிதாக ஓதுதல்

தமிழ்மாலை செவிக் கினிதாக வல்லார் 31

34. சோர்வின்றிக் கற்க

சொற்றமிழ் இன்னிசைமாலை சோர்வின்றிக் கற்றவர் 274

35. தகவுற மொழிதல்

ஞானசம்பந்தன சொல் தகவுற மொழிபவர் 344

36. தஞ்சமிதெனக் கொண்டு ஓதுதல்

ஞானசம்பந்தன சொன்மாலை தஞ்சமென நின்றிசை மொழிந்த அடியார்கள் 339

37. தனியாய் - ஒருத்தராயிருந்து பாடுதல்

ஞானசம்பந்தன் செப்பிய செந்தமிழ் ஒருத்தராகிலும் பலர்களாகிலும் உரை செய்வார் 296

38. தொழுதேத்துதல்

தமிழ்மாலை பத்தும் தொழுதேத்த வல்லாரவர் 171

39. நம் பரம் இது எனக் கருதி ஓதுதல்

ஞானசம்பந்தன் சொல் நம் பரம் இதுஎன நாவினுல் நவில்பவர் 289

40. நம்பி ஓதுக

ஞானசம்பந்தன் சொன்ன நம்பி நாள் மொழிபவர் 351

41. நன்கு உணரச் சொல்லுதல்

ஞானசம்பந்தன் ஞானத்தமிழ் நன்குணரச் சொல்விடல்......வல்லோர் 117

42. நன்மையால் உரைத்தல்

ஞானசம்பந்தன் நற்றமிழ்மாலை நன்மையால் உரைசெய்து நவில்வார் 376

---

*சொல்வகை நான்கினுள் ஒன்ருகிய வண்ணமானது பெருவண்ணம், இடைவண்ணம், வனப்பு வண்ணம் என மூன்று வகைப்படும். சிலப்பதிகாரம்-மூன்ரும் பதிப்பு-பக்கம் 88.

## 43. நாளும் ஓதுதல்

ஞானசம்பந்தன் சொன்ன நம்பி நாள் மொழிபவர்க் கில்லையாம் வினை 351
ஞானசம்பந்தன் நற்றமிழ் பத்திவை நாளும் சொல்ல வல்லவர் 231
ஞானசம்பந்தன்......வண்ணம் புனைமாலை வைகல் ஏத்துவார் 86

## 44. நினைந்தேத்தி ஓதுதல்

நினைந்தேத்தி நின்று விம்மா வெருவா விரும்பும் அடியார் 175

## 45. பங்க நீங்கப் பாடுதல்

சம்பந்தன் உரை பங்க நீங்கப் பாடவல்ல பத்தர்கள் 47

## 46. பண்ணுடன் ஓதுதல்

ஈரைந்து மாலையும் இயலுமாப் பண்ணினாற் பாடுவார்க் கில்லையாம் பாவமே 292
ஞானசம்பந்தன் சொல்லிவை பண்பயன் கொளப் பாடவல்லவர் 162
பண்ணியல் பாடல் வல்லார்கள் 4
பத்திவை பண்கொளப் பாடவல்லார் 149
பத்தும் பண்ணியல்பாகப்......பாடியுமாடியும் பயில வல்லார்கள் 75
மணஞ்சேரி பண்ணாரப் பாடவல்லார் 152

## 47. பத்திமையுடன் பாடுதல்

பத்தும் பண்ணியல்பாகப் பத்திமையாலே பாடியுமாடியும் பயில வல்லார்கள் 75

## 48. பயில்வோடு கற்றல்

பத்திவை பயில்வொடு கற்று வல்லவர் 124

## 49. பரவிடுந் தொழிலில் வல்லராதல்

மாலை பரவிடுந் தொழில் வல்லவர் 246

## 50. பரவித் திரிதல்

மாலைபத்தும் பரவித் திரிந்தாக வாடிய சிந்தையினார்க்கு நீங்கும் அவலக் கடல்தானே 365

## 51. பரவிப் பணிந்தேத்த

பாடல் பத்தும் பரவிப் பணிந்தேத்த வல்லார் 315

## 52. பழிதீர ஏத்துதல்

மாலை பழிதீரநின் றேத்த வல்லார்கள் 254

## 53. பண்ணுள் பாடியாட

தமிழ்மாலை பண்ணுள் பாடியாட 74

## 54. பஜனை - பலர் கூடிப் பாடுதல் (இன்னிசைக் கோஷ்டி, கூட்டம்)

இனிதா இசை பாடியாடிக் கூடுமவர் 8
கடிக்குளத் தமர்வானை இனமலிந்து இசைபாட வல்லார்கள் 240
ஞானசம்பந்தன் செப்பிய செந்தமிழ் ஒருத்தராகிலும் பலர்களாகிலும் உரைசெய்வார் உயர்ந்தார்களே 296
முதுகுன்றைக் குறையாப் பனுவல் கூடிப்பாட வல்லார்கள் 200

## 55. பாடியாடுதல்

ஞானசம்பந்தன் சந்தம்மலி பாடல்சொலி யாடத் தவமாமே 16
ஞானசம்பந்தன் சொல் படியிவை பாடி நின்றாட வல்லார் 270
ஞானசம்பந்தன் சொற் பாடியாடக் கெடும்பாவமே 148
ஞானசம்பந்தன் சொன்ன அருந்தமிழ் மாலைகள் பாடியாடக் கெடும் அருவினையே 350
ஞானசம்பந்தன் சொன்ன தமிழ் பாடியாடக் கெடும்பாவமே 251
ஞானசம்பந்தன் சொன்ன பண்ணுலாம் அருந்தமிழ் பாடுவா ராடுவார் பழியிலரே 348
ஞானசம்பந்தன் நவின்ற......பத்தும்......பண்ணியல்பாகப் பத்திமையாலே பாடியும் ஆடியும் பயில வல்லார்கள் 75
ஞானசம்பந்தன் பாடலாய தமிழீரைந்தும் மொழிந்துள்கி ஆடும் அடியார் 198
ஞானசம்பந்தன செந்தமிழ் பாடியாடக் கெடும் பாவமே 266
தமிழ்விரகன் சொன்ன இவை பாடியாடக் கெடும் வினைகளே 249
தமிழ்விரக னுரைத்த தமிழ்மாலை பண்ணுள் பாடியாடப் பிரியார் பரலோகந் தானே 74

## 56. பாரார் புகழ ஓதுதல்

பாரார் புகழப் பரவ வல்லவர் 24

## 57. பொழுதில் துதித்தல்

பத்தும் பாடியே தொழுதுபொழுது தோத்திரங்கள் சொல்லித் துதித்து நின்று அழுதும் நக்கும் அன்பு செய்வார் 73

மகிழ்ந்தேத்த

("மனமகிழ்ச்சியுடன் ஓதுதல்" என்பதைப் பார்க்க.)

## 58. மடியாது ஓதுதல்

சம்பந்தன் சொல் மடியாது சொல்லவல்லார்க் கில்லையாம் மறுபிறப்பே 179

## 59. மனப்பாடம் பண்ணிப் பயிலல்

ஞானசம்பந்தன்......தமிழ்பத்திவை தரித்தார்கள் 257
தமிழ்விரகன் தான்சொன்ன தமிழ்தரிப்போர் 209-12
தமிழ்விரகன மொழிகள்......மனங்கொளப் பயிற்றுவோர் மார்பே சேர்வாள் வானோர்சீர் மதிநுதல் மடவரலே 126
மாலைபத்தும் தாங்கவல்லார் புகழ்தாங்குவாரே 5

## 60. மனமகிழ்ச்சியுடன் ஓதுதல்

ஞானசம்பந்தன் சொல் சிந்தையால் மகிழ்ந்தேத்த வல்லார் 307
ஞானசம்பந்தன் சொல்லிய நற்றமிழ் மானமாக்கும் மகிழ்ந்துரை செய்யவே 301
தமிழ்விரகனதுரை ஒருபதும் மனமகிழ்வோடு பயில்பவர் 20
வண்டமிழ் மாலைகள் மாலதாய் மகிழ்வோடும்......இசைபாட வல்லார்கள் 240

## 61. முறைமையுடன் ஓதுதல்

ஞானசம்பந்தன்......ஆய்ந்த பத்தும் முறைமையால் ஏத்த வல்லார் 316

## 62. மொழிந்துள்கி யாடுதல்

தமிழீரைந்து மொழிந்துள்கி யாடு மடியார் 198

## 63. யாழில் வல்லோர் பாடுதல்

ஞானசம்பந்தன் தமிழ்பத்தும் யாழின் னிசைவல்லார் சொலக்கேட்டார் 11

## 64. வந்தவாறே பாடுதல்

இசைகூர வந்தவணம் ஏத்துமவர் 165
ஞானமுணர் பந்தன் உரைபேணி வந்தவணம் ஏத்துமவர் 170
வந்தவாறே புனைதல் வழிபாடே 28

## 65. வல்லதோ ரிச்சையினுல் வாய்க்கச் சொல்லுதல்

வல்லதோ ரிச்சையினுல் வழிபாடிவை பத்தும் வாய்க்கச் சொல்லுதல் கேட்டல் வல்லார் 105

### 66. வல் வித்தகத்தால் மொழிதல்

ஞானசம்பந்தன் பாடல்.....வல்வித்தகத்தால் மொழிவார் 208

### 67 வலந்தருதல்

தமிழ்க்கிளவி பத்துமிவை கற்று வலந்தருமவர் 167

### 68. வாய்ந்தவாறே பாடுதல்

ஞானசம்பந்தன் சொல் வாய்ந்தவா றேத்துவார் 151

### 69. வாய் நிரம்ப (வாய் குளிர)ப் பாடுதல்

ஞானசம்பந்தன் இன்னுரைகள் வாயடைந்து பாடவல்லார் 48

### 70. வாழியாகக் கற்றல்

பத்திவை வாழியாகக் கற்பவர் 311

## (12) தேவாரம் ஓதுவதால், கற்பதால், கேட்பதால் வரும் பயன்வழிப் பாகுபாடு

### 1. அடி சேர்தல் (ஈசன் அடி சேர்தல்) அடிபிரியாமை

இவைவல்லார் தூமலராள் துணைவராகி முற்றுலகமது ஆண்டு முக்கணன் அடிசேர முயல்கின்றாரே 129

சம்பந்தன் அடிஞானம் வல்லார் அடிசேர்வார்களே 87

சிந்தை செய்வார் சிவன்சேவடி சேர்வது திண்ணமே 254

செந்தமிழ் வல்லவர் வானிடை வெந்த நீறணியும் பெருமானடி மேவரே 144

செந்தமிழ் வல்லார் சீர்மலிந்தழகார் செல்வம தோங்கிச் சிவனடி நண்ணுவர் தாமே 41

தமிழ்கள் கொண்டேத்த வல்லார் எந்தைதன் கழலடி எய்துவரே 114

தமிழ்பத்திவை யுற்றுரை செய்பவர் மாதியல் பங்கன் மலரடி சேரவும் வல்லரே 267

பாடல் இவை பத்தும் மிகவல்லார் சில மல்கிய செல்வன்னடி சேர்வர் 15

பாடல்கள் பத்துஞ் சொல்ல வல்லவர் தொல்வினைபோய்ச் செல்வன சேவடி சென்றணுகி 361

பாடிய மாந்தர் பரமன்னடி சேர்ந்து 2

மாலைசெப்ப வல்லார்கள் அறவன்கழல் சேர்ந்து 199

மாலே சோர்வின்றிக் கற்றவர் கழலடி காண வல்லரே 274
மாலை யீரைந்தும் இருநிலத்தில் இரவும் பகலும் நினைந்தேத்தி நின்று விம்மா வெருவா விரும்பும் அடியார் விதியார் பிரியார் சிவன் சேவடிக்கே 175
மூதுகுன்றை......பனுவல்கூடிப் பாடவல்லார்கள் பிறையார் சடையெம் பெருமான் கழல்கள் பிரியாரே 200

## 2. அடியவராதல்

பத்திவை பயில்வொடு கற்றுவல்லவர் உலகினில் அடியவரே 124

## 3. அமரர் தொழுதேத்தல்

தமிழ்பத்திவை நாளுஞ் சொல்ல வல்லவர் தம்மைச்சூழ்ந் தமரர் தொழு தேத்த 231

## 4. அமரலோகத் திருத்தல்

அளிதரு பாடல் பத்தும் வல்லார்கள் அமரலோகத் திருப்பாரே 380

## 5. அமரலோக வாழ்வு

மாலை யீரைந்து மிவை வல்லவர் உருத்திர ரெனப்பெற் றமரலோக மிகவாழ்வர் 329

## 6. அமராவதியோர் தொழச் செல்வது

தமிழ்பத்திவை......இசைவல்லவர் ஓங்கமராவதியோர் தொழச் செல்வதும் உண்மையே 265

## 7. அமருலகாளுவர்

தமிழ்வல்லார்க் கடையா வினைகள் அமரலோக மாள்வாரே 197
பல்பெயர்ப் பத்தும் வல்லார்க் கடையாவினைகள் உலகில் நாளும் அமருல காள்பவரே 63-12

## 8. அமருலகில் இசையோடு தவநெறி அடைதல்

இன்னிசையா லிவைபத்தும் இசையுங்கால் ஈசனடி யேத்துவார்கள் தன்னிசையோ டமருலகில் தவநெறிசென் றெய்துவார் தாழாதன்றே 130

## 9. அருள் சேருதல்

நன்மையால்......பாடல்பத் தேத்த வல்லா ரருள் சேர்வரே 269

## 10. அருள் பெறுதல்

மாலைதஞ்சமென நின்றிசை மொழிந்த அடியார்கள் தடுமாற்றம் வஞ்சமிலர் நெஞ்சிருளு நீங்கி யருள்பெற்று வளர்வாரே 339

## 11. அருள்பெறுந் தன்மை

பத்தும் வல்லார் தந்துயர்போகி விடமலிகண்டன் அருள்பெறுந் தன்மை மிக்கோரே 100

## 12. அருள்பேறு உளதாதல்

பத்துமொழிவார் திருவளர் செம்மையாகி யருள்பேறு மிக்க துளதென்பர் செம்மையினரே 222

## 13. அல்லல் அறுதல்

பத்தும் வல்லவர் அல்லலோ டருவினை யறுத லாணையே 273

## 14. அல்லல் அறுப்பார்

தோத்திரங்கள் சொல்லித் துதித்துநின் றழுது நக்கு மன்புசெய்வார் அல்லல் அறுப்பாரே 73

## 15. அல்லல் இல்லாமை

அல்லலின்றி விண்ணுள்வர்கள்......பத்தும் வல்லாரே 218

## 16. அல்லல் இல்லை

தமிழ்புந்தியால் அகவிட மெங்குநின் றேத்தவல்லார்க் கில்லையல்லலே 268

## 17. அல்லல் இலர்

மாலை பரவிடுந்தொழில் வல்லவர் அல்லலும் பாவமு மிலர்தாமே 246

## 18. அல்லல் இன்றி வாழுதல்

பாடல் சீரார் நாவினல் வல்லராகி வாழ்த்துவார் அல்லலின்றி வாழ்வரே 300

## 19. அல்லல் தீரும்

பாடல்வல்லார் தமக்கென்றும் அல்லல் தீரும் 26

## 20. அவலக்கடல் நீங்கும்

தமிழ்மாலை பத்தும் பரவித் திரிந்தூர்க வாடிய சிந்தையி னார்க்கு நீங்கும் அவலக் கடல்தானே 365

## 21. அவலம் அடையா

பாடல் வல்லார் தமக்கென்றும் அல்லல்தீரும் அவலம் அடையாவே 26
மாலைபுனைந்த பத்தும் பரவிப் புகழ்ந்தேத்த ஐயுறவில்லை பிறப்பறுத்தல் அவலம் அடையாவே 362

## 22. அவலம் அறும்

பாடல் வல்லார்க் கறும் நீடவலம் 134

## 23. அவலம் இலர்

ஒண்டமிழ் வல்லார்க்கறும் பழிபாவம் அவலம் இலரே 383

## 24. அழிவிலராதல்

ஞானசம்பந்தன சொற்றகவுற மொழிபவர் அழிவிலர் 344

## 25. அனுபோகமோடு யோகம்

மாலைகள்வலார் சித்திர விமானமமர் செல்வ மலிகின்ற சிவலோகமருவி அத்தகு குணத்தவர்களாகி, அனுபோகமொடி யோகம் மவரதே 338

## 26. ஆளுதல் எத்திசையும்

("எத்திசையும்"—என்பதைப் பார்க்க)

## 27. இடர்—அடையா(து)

. பத்தும் பகரும்மடி யவர்கட்கிடர் (பாவம்) அடையாவே 12

## 28. இடர்—அணைவிலர்

செந்தமிழ்...பேணுதலுரியார்...இடர்...அணைவிலரே 136

## 29. இடர் இல்லை

பத்தும் உரைப்பவர்க் கிடர் இல்லையே 297

## 30. இடர் இன்மை

பத்தும் வல்லார்......இடராயின இன்றி 261

## 31. இடர் ஒழிதல்

தமிழ்விரகன மொழியே வல்லவர் தம்இடர் திடமொழியே 371-12

### 32. இடர் கெடும்

பத்தினையும் எம்பந்தம் எனக்கருதி ஏத்துவார்க் கிடர்கெடுமே 177

### 33. இடர் நீங்குதல்

பாடலிவை வல்லார் எப்பரிசில் இடர்நீங்கி 190

3/33

### 34. இடர் போம்

இன்னிசை யீரைந்தேத்த வல்லோர்கட் கிடர்போமே 97

### 35. இடர் விரவிலர்

ஒருபது பயில வல்லவர் இடர் விரவிலர் 122

### 36. இமையவர் உலகு எய்துவர்

தமிழ்பத்தும் எங்கும் ஏத்த வல்லார்கள் எய்துவர் இமையவர் உலகே 228

### 37. இமையவர் ஏத்த இருப்பர்

பாடல்கள் பத்தும் வல்லார் இமையவர் ஏத்த இருப்பர் தாமே 7

### 38. இமையோர் உலகத்திருப்பர்

பாடலிவை வல்லார் எப்பரிசில் இடர்நீங்கி இமையோர் உலகத் திருப்பாரே 190

### 39. இமையோர் உலகெய்தியரசாளுதல்

செந்தமிழின் மாலைகொடு......சிந்தைசெய வல்லவர்கள் நல்லவர்க ளென்ன நிகழ்வெய்தி இமையோர் அந்த வுலகெய்தி அரசாளுமதுவே சரதம் ஆணை நமதே 336

### 40. இமையோர் ஏத்த வீற்றிருத்தல்

செந்தமிழிவை கொண் டின்னலம்பாட வல்லவர் இமையோ ரேத்த வீற்றிருப்பவர் இனிதே 378

### 41. இமையோர்கள் ஏத்த இருப்பார்

பத்தும் இவை செப்பவல்லார் சிவலோகத்தில் எய்திநல்ல இமையோர்கள் ஏத்த இருப்பார்களே 258

### 42. இமையோர் முதலாவர்

ஞானசம்பந்தன் சொல் முந்தியேத்த வல்லார் இமையோர் முதலாவரே 146

## 43. இமையோரிலும் முந்துவர்

பத்தும் முறைமையால் ஏத்த வல்லார் இமையோரிலும் முந்துவரே 316

## 44. இமையோரோடு கெழுமுதல்

அடிவாழ்த்த வல்லார் கெழியார் இமையோரொடு 157

## 45. இருள் - நெஞ்சிருள் - நீக்கம்

மாலை தஞ்சமென நின்றிசை மொழிந்த அடியார்கள் தடுமாற்றம் வஞ்சமிலர் நெஞ்சிருளும் நீங்கி யருள்பெற்று வளர்வாரே 339

## 46. இல்லை நீணிலத்து (பிறப்பில்லை)

நின்னை நினையவல்லவர் இல்லை நீணிலத்தே 128

## 47. இறைவனோ டுறைவர்

இனமலிந் திசைபாட வல்லார்கள்போய் இறைவனோ டுறைவாரே 240

## 48. இன்பம் அடைவார்

மாலை செப்ப வல்லார்கள் அறவன் கழல்சேர்ந் தன்போ டின்பம் அடைகிற்பாரே 199

## 49. இன்பம் ஆம்

இன் தமிழிவை சொல இன்பமாமே 111

## 50. இன்பம் உயரும்

ஊனமில் மொழிவலார்க் குயரும் இன்பமே 279

## 51. இன்பம் எய்தி வீற்றிருந்து வாழுதல்

பாடல்வல்லவர் மிக்க இன்பம் எய்தி வீற்றிருந்து வாழ்தல் மெய்ம்மையே 233

## 52. இன்பம் ஓங்கும்

ஏத்தவல்லார் அவர்க்கும் தமருக்கும் ஊழியொரு பெருமின்பம் ஓக்கும் 364

## 53. இன்பம் பேராமை

ஆருரைச் சொன்ன பாரூர்பாடலார் பேரா ரின்பமே 91

## 54. இன்பமே தரும்

இன் தமிழ் முழுதும் வல்லவர்க் கின்பமேதரும் முக்கணெம் மிறையே 368

### 55. ஈசன் ஆளும் நகர் மேவுதல்

தமிழ்மாலை பாடுமவர் போய் அறைகழல் ஈசன் ஆளும் நகர்மேவி யென்றும் அழகா யிருப்ப தறிவே 219

### 56. ஈசன் இருக்கும் உலகு எய்துதல்

பத்தும் வல்லார்கள்போய் எந்தையீசன் இருக்கும் உலகெய்த வல்லார்களே 255

### 57. ஈசன் என்னும் இயல்பு பெறல்

பத்தும் ஏத்தி யின்னிசையாற் பாடவல்லார் இருநிலத்தில் ஈசனெனும் இயல்பினோரே 132

### 58. ஈசன் பாதம் பற்றுதல்

செந்தமிழ் கூறவல்லார் பற்றுவர் ஈசன்பொற் பாதங்களே 113

### 59. ஈசனை எய்துதல்

வண்டமிழ்கொண் டின்பமர வல்லார்கள் எய்துவர்கள் ஈசனையே 62

### 60. ஈசனோடே யிருத்தல்

பத்தும் வல்லார் மெய்த்தவத்தோர் விரும்பும் மன்னுசோதி யீசனோடே மன்னி யிருப்பாரே 50

### 61. உடையராதல்

பத்திவை வல்லார் உடையாராகி......உலகினில் மன்னுவர் 42

### 62. உணர்வு பெறுதல்

ஞானசம்பந்தன தமிழிவை ஒண்பொரு ளுணர்வதும் உணர்வே. 356

### 63. உம்பராதல்

மாலையீரைந்தும் அஞ்செழுத்துற்றன வல்லவர் உம்பராவரே 280

### 64. உம்பரார் எதிர்கொள்ளுதல்

ஞானசம்பந்தன் சொல் நம்பர மிதுவென நாவினல் நவில்பவர் உம்பரார் எதிர்கொள உயர்பதி அணைவரே 289

### 65. உய்ந்துளோராதல்

பந்தன் சொல்லைச் சிந்தைசெய்வோர் உய்ந்துளோரே 298

## 66. உயர்கதி பெறுதல்

இசைமொழிபவர் வினைசிந்தி முனுற உயர்கதி பெறுவர்களே 125

## 67. உயர்ந்தாராதல்

செந்தமிழ் உரை உயருமா மொழிவார் உலகத் துயர்ந்தாரே 185
செந்தமிழ் ஒருத்தராகிலும் பலர்களாலும் உரைசெய்வார் உயர்ந்தார்களே 296

## 68. உயர்ந்தாரோடுங் கூடுவர்

பத்திவை கூறுமாறு வல்லார் உயர்ந்தாரொடுங் கூடுவரே 259

## 69. உயர்ந்தோர் சுற்றமாதல்

மாலை யீரைந்தும் உரைப்பவர் கேட்பவர் உயர்ந்தோர் சுற்றமுமாகி 381

## 70. உயர்பதி அணைதல்

ஞானசம்பந்தன் சொல்......நவில்பவர் உம்பரார் எதிர்கொள உயர்பதி அணைவரே 289

## 71. உயர்பொருள் தருதல்

தமிழ்விர கனதுரை உன்னிய ஒருபதும் உயர்பொருள் தருமே 123

## 72. உயர்வு பெறுதல்

உமதடியிணை உரைமல்கு புகழவ ருயர்வே 352
உரைசெய்தன பத்தும் உயர்வாம் இவை யுற்றுணர்வார்க்கே 38
ஏத்தவல்லா ரவர்க்குந் தமருக்குந் ஊழிபொரு பெருமின்பம் ஓக்கும் உருவும் உயர்வாமே 364
சம்பந்தன் ஒன்றும் உரைவல்லார் என்று முயர்வாரே 93
மாலைகள் பத்தும் ஊரூர் வினைவார் உயர்வாரே 37

## 73. உருத்திரர் எனப் பேறல்

மாலையீரைந்தும் இவைவல்லவர் உருத்திரரெனப் பெற்று 329

## 74. உருவும் உயர்வாம்

ஏத்தவல்லா ரவர்க்கும் தமருக்கும்......உருவும் உயர்வாமே 364

## 75. உலகாளுதல்

இவைவல்லார் தூமலராள் துணைவராகி முற்றுலகமது ஆண்டு 129

அமருலகு, இமையோருலகம், சிவலோகம், நீடுலகம், பரலோகம், புவலோகம், மூவுலகம் என்பனவும் பார்க்க.

## 76. உள்ளம் ஒருவழிக் கொள்ளுதல்

மாலை நன்மையால் உரைசெய்து நவில்வார் ஊன சம்பந்தத் துறுபிணி நீங்கி யுள்ளமும் ஒருவழிக்கொண்டு 376

## 77. உள்ளம் ஒன்றி உலகில் மன்னுதல்

பத்திவை வல்லார் உடையாராகி யுள்ளமுமொன்றி யுலகினில் மன்னுவர் தாமே 42

## 78. ஊனம் தீர்தல்

தமிழ்வல்லார் ஊனத்தொடு துயர்தீர்ந்து 14

## 79. எத்திசையும் ஆளுதல்

ஞானசம்பந்தன் மொழிகள் பாடவல பத்தரவர் எத்திசையும் ஆள்வர் 337

## 80. எழிலோராதல்

இசைமலிதமிழ் ஒருபதும்வல அவருலகினில் எழில் பெறுவரே 22
தமிழ்வல்லார் ஊனத்தொடு துயர்தீர்ந்துல கேத்தும் எழிலோரே 14

## 81. ஒளியினராதல்

பரவ வல்லவர் வினைகெட மலிபுகழொடு கிளரொளியினரே 121

## 82. கதி

உயர்கதி, சிவகதி, பரகதி, வியனுலகுறுகதி, வீடுகதி பார்க்க.

## 83. கதிபேறு பெறுதல்

மாலைமொழிவார் போய் விரைசெய் மலர்தூவ விதிபேணுகதி பேறு பெறுவாரே 341

## 84. கரையா உரு ஆதல்

மாலைபாடும் அவரெல்லாம் கரையா உருவாகி 84

## 85. கலைமகள் துணைபெறல்

ஒருபதும் மனமகிழ்வொடு பயில்பவர்.........கலைமகள்.........இசைதர இருநிலனிடை யினிதமர்வரே 20

## 86. கவலை கழிவார்

கலைக ளிவைவல்லார் கவலை கழிவாரே 85
பத்துரைப்பார் உலகத்துக் கருவாரிடும்பைப் பிறப்பதறுத்துக் கவலை கழிவாரே 72

## 87. கவலை களைவார்

ஈசன்கழல்சேர் பாடல்பத்தும் வல்லார் கவலை களைவாரே 70

## 88. கழல் பிரியாமை

பாடவல்லார்கள்......பெருமான் கழல்கள் பிரியாரே 200

## 89. கழலடி காணுதல்

மாலைசோர்வின்றிக் கற்றவர் கழலடிகாண வல்லரே 274

## 90. குணங்கள் கூடுதல்

சொற்களால்......பேணவே குற்றமுற்று மின்மையிற் குணங்கள் வந்து கூடுமே 234

## 91. குணத்தவ ராதல்

மாலைகள் வலார்......சிவலோக மருவி அத்தகு குணத்தவர்களாகி 338

## 92. குணமாம்

ஞானசம்பந்தன செந்தமிழ்கொண்டு பாடக் குணமாமே 57

## 93. குலம்...புணர்தரல்

ஒருபதும் நவில்பவர் நிகழ்குலம்......புணர்தர நலமிகுவரே 21

## 94. குற்றங்கள் குறுகா

ஞானசம்பந்தன தமிழ்மாலை கூறுவாரையுங் கேட்க வல்லாரையும் குற்றங்கள் குறுகாவே 239

## 95. குற்றம் அற்றார்கள்

ஞானசம்பந்தன் சொல் கோலத்தாற் பாடுவார் குற்றமற்றார்களே 286

## 96. குற்றம் அற்றோர்

ஞானசம்பந்தன் கூறுந் தமிழ்வல்லவர் குற்றம் அற்றோரே 384

## 97. குற்றம் இலராதல்

மாலை......இசைபாடிய மாந்தர்......குற்றமின்றிப்......பொலிவாரே 2

## 98. குற்றம் இன்மை

சொற்களால்...பேணவே குற்றமுற்று மின்மையில் 234

## 99. குறைபாடு ஒழியும்

பாடியமாந்தர்...குறைபா டொழியாப்...பொலிவாரே 2

## 100. கூர்மையர்

குலமார் தமிழ் கூறுவர் கூர்மையரே 153

## 101. கேடு இல்லை

வீழிம்மிழலை கிளர்பாடல் வல்லார்க் கில்லைகேடே 35

## 102. கேடில் வாழ்பதி பெறுதல்

பண்பினர்......தாள்தொழக் கெழுவினரவர் தம்மொடுங் கேடில் வாழ்பதி பெறுவரே 213

## 103. கேடிலர்

சொல்வழி பாடிவைகொண் டடிவாழ்த்த வல்லார் கெழியா ரிமையோரொ கேடிலரே 157

## 104. கேதம் இலர்

பத்தும் இசைவல்லார் கேதத்தினை யில்லார் 9

## 105. கோடையினராதல்

ஒருபதும் நவில்பவர்......நிகரிலகொடை......புணர்தர நலமிகுவரே 21

## 106. கோளும் நாளும் நலியா வகை

கோளும்நாளும் அடியாரைவந்து நலியாதவண்ணம் உரைசெய்...மாலை 221

## 107. சங்கமோடு நீடி வாழ்வர்

பாடவல்ல பத்தர்கள் பாரிதன்மேற் சங்கமோடு நீடி வாழ்வர் தன்மையினுலவரே 47

## 108. சங்கையிலர்

சங்கமலி செந்தமிழ்கள் பத்துமிவை வல்லவர்கள் சங்கை யிலரே 332

## 109. சயமகள் துணைபெறல்

ஒருபதும் நவில்பவர்......சயமகள்......புணர்தர நலமிகுவரே 21
ஒருபதும் மனமகிழ்வொடு பயில்பவர்......சயமகள்......இசைதர இருநிலனிடை யினிதமர்வரே 20

## 110. சிவகதி (சேர்தல், நண்ணுதல், புகுதல், பெறுதல்)

சம்பந்தன்...பாடல் வல்லாரவர் சிவகதி பெறுவது திடமாமே 241
ஞானசம்பந்தன் சொற் சிந்தைசெய்து பாடவல்லார் சிவகதி சேர்வாரே 66
தமிழிவை சொல்ல வல்லார் நவமொடு சிவகதி நண்ணுவரே 112
பத்தும் இசைவல்லார் கேதத்தினை யில்லார் சிவகெதியைப் பெறுவாரே 9
பத்தும் மிகவல்லார் சிலமல்கிய செல்வன்னடி சேர்வர் சிவகதியே 15
பத்தும் வல்லவர் புண்ணியர் சிவகதி புகுதல் திண்ணமே 275
பந்தன்மெய்ப் பாடல் வல்லவர் சிரமலி சிவகதி சேர்தல் திண்ணமே 271

## 111. சிவலோக நெறி சேர்தல்

செந்தமிழ்கள் செப்புமவர் சேர்வர் சிவலோக நெறியே 333

## 112. சிவலோகம் (சேர்தல், பெறுதல், மருவுதல்)

சம்பந்தன்...தமிழ்வல்லார் சிவலோகஞ் சேர்வாரே 60
ஞானசம்பந்தன் செய்யுள் பாடவல்லார் சிவலோகஞ் சேர்வாரே 189
ஞானசம்பந்தன் ஞானத்தமிழ் நன்குணரச் சொல்லிடல் கேட்டல்வல்லோர் தொல்லை வானவர் தங்களொடுஞ் செல்குவர் சீரருளாற் பெறலாஞ் சிவலோகமதே 117-12
தமிழ்மாலைகள் வலார் சித்திர விமானமமர் செல்வமலிகின்ற சிவலோக மருவி 338
பத்தும் இவை செப்பவல்லார் சிவலோகத்தில் எய்தி 258
பாடல்கள் பத்துஞ் சொல்லவல்லவர் தொல்வினைபோய்ச் செல்வன சேவடி சென்றணுகிச் சிவலோகஞ் சேர்வாரே 361
பாடல் சிந்தனையால் உரைசெய்வார் சிவலோகஞ் சேர்ந்திருப்பாரே 193
பாடல் பத்திவை சிந்தை செய்பவர் சிவலோகஞ் சேர்வரே 276

## 113. சிவன் உலகம் நண்ணுவர்

பத்தும் வல்லார் நடலையவை யின்றிப்போய் நண்ணுவர் சிவனுலகம் 261

## 114. சிவன் சேவடி சேர்தல்

மாலை பழிதீர நின் றேத்த வல்லார்கள் போய்ச் சிந்தை செய்வார் சிவன் சேவடி சேர்வது திண்ணமே 254

## 115. சிவன் சேவடி பிரியார்

மாலையீரைந்தும்...விரும்பும் அடியார் விதியார் பிரியார் சிவன்சேவடிக்கே 175

## 116. சீர்மலிதல்

செந்தமிழ் வல்லார் சீர்மலிந்து...சிவனடி நண்ணுவர் 41

## 117. செடிகள் நீக்கம்

சம்பந்தன் முடிவிலின்தமிழ் செடிகள் நீக்குமே 94

## 118. செம்மை—திருவளர் செம்மை

மாலை பத்து மொழிவார் திருவளர் செம்மையாகி யருள்பேறு மிக்க துளதென்பர் செம்மையினரே 222

## 119. செல்வம் ஆம்

ஞானசம்பந்தன செந்தமிழ் செல்வமாம் இவை செப்பவே 135

## 120. செல்வம் ஓங்குதல்

செந்தமிழ் வல்லார் சீர்மலிந்தழகார் செல்வம தோங்கி 41

## 121. செல்வர் - தீதிலாச் செல்வராதல்

ஞானசம்பந்தன் உரைபத்துஞ் செப்ப வல்லவர் தீதிலாச் செல்வரே 309

## 122. செல்வர் - மாற்றில் செல்வர்

ஞானசம்பந்தன் தமிழ்வலார் மாற்றில் செல்வர் 308

## 123. ஞானம் இது என்பது

செந்தமிழ்கொண் டிசைபாடு ஞானம் வல்லார் அடிசேர்வது ஞானமே 138

## 124. ஞானம் உண்டாதல்

திருஞானசம்பந்தன செந்தமிழ்கள் உருஞானமுண்டாம் உணர்ந்தார் தமக்கே 156

## 125. தக்கோர்

சந்தங்கொள் சம்பந்தன் தமிழுரைப்போர் தக்கோரே 321
ஞானசம்பந்தன் தமிழ்கற்போர் தக்கோர் தாமே 210

## 126. தடுமாற்றம் இலர்

மாலை தஞ்சமென நின்றிசை மொழிந்த அடியார்கள் தடுமாற்றம்......இலர் 339

## 127. தடுமாற் றறுப்பார்

சந்தம் இவை வல்லார் தடுமாற் றறுப்பாரே 88

## 128. தவஞ்செய்தோர்

தமிழ்விரகன் தான்சொன்ன தமிழ் தரிப்போர் தவஞ் செய்தோரே 209

## 129. தவநெறி ஆம்

தமிழ்மாலை தங்கிய மனத்தினால் தொழுதெழுவார் தமர்நெறி யுலகுக்கோர் தவநெறியே 247

## 130. தவநெறி எய்துதல்

பத்தும் வல்லார் நடலையவை யின்றிப்போய் நண்ணுவர் சிவனுலகம் இடராயின இன்றித் தாமெய்துவர் தவநெறியே 261

பாடல்.........இவைபத்தும் இசையுங்கால் ஈசனடி யேத்துவார்கள் தன்னிசையோ டமருலகில் தவநெறிசென் .றெய்துவார் தாழாதன்றே 130

## 131. தவமாதல்

ஞானசம்பந்தன்......ஒண்சொலி னிவைமாலை உருஎணத் தவமாமே 118
ஞானசம்பந்தன் சந்தம்மலி பாடல்சொலி யாடத் தவமாமே 16
ஞானசம்பந்தன் சொல்லிவை பத்தும் பாடத் தவமாமே 187
ஞானசம்பந்தன தமிழ்வல்லவ ரடிபேணுதல் தவமே 10

## 132. தளர்வான ஒழிதல்

பாடல் இவைவல்லார் தளர்வான தாமொழிய 194

## 133. தாழும் மொழிகள்

வீழிமிழலை மேல் தாழுமொழிகளே 92

## 134. திருவுரு...அடைதல்

ஒருபதும் நவில்பவர்...திருவுரு...புணர்தர நலமிகுவரே 21

## 135. திருவளர் செம்மை

பத்து மொழிவார் திருவளர் செம்மையாகி 222

## 136. திருவோடு புகழ்மல்கு தேசு

பத்தும் வல்லார் திருவொடு புகழ்மல்கு தேசினரே 109

## 137. தீதிலார்

பாடல் சொல்லவே வல்லவர் தீதிலார் ஓதநீர் வையகத்தே 215

## 138. தீய அடையா

தமிழ்பத்திவை தரித்தார்கள் மேல்வந்து தீயவ் வடையாமையால் 257

## 139. தீயதிலர்

ஞானசம்பந்தன்...மாலைபுகழ்வார் துயர்கள் தீயதிலர் தாமே 340

## 140. தீர்த்தமெனப் புனிதம் பெறுதல்

பாடலிவை வல்லார் சேர்ந்த இடமெல்லாம் தீர்த்தமாகச் சேர்வாரே 45-12

## 141. தீவினை

('வினை'—பார்க்க.)

## 142. துயர் அடையா

பத்தும் உண்மையினால் நினைந்தேத்த வல்லார்மேல் மெலிகெழு துயரடையா 79

## 143. துயர் அணைதல் இல்லை

செந்தமிழ்...பேணுத லுரியார் இன்னெடு நன்னுல கெய்துவர் எய்திய போகமும் உறுவர்கள் இடர், பிணி, துயரணைவிலரே 136

## 144. துயர் இல்லை

காரோணத்து வண்டமிழ் சொல்லுவார்க்கும் இவை கேட்பவர்க்கும் துயரில்லையே 252

## 145. துயர் இலர்

சொற்றெரி ஒருபதும் அறிபவர் துயரிலர் 345
ஞானசம்பந்தன செந்தமிழ் சொலமல்குவார் துயரிலரே 354
ஞானசம்பந்தன வண்டமிழ் சொன்னவர் துயரிலர் 343

## 146. துயர்கள் இலர்

தேனமொழி மாலைபுகழ்வார் துயர்கள் தீயதிலர் தாமே 340

## 147. துயர் கெடுதல்

பத்தும் வல்லார் போய் வெந்துயர் கெடுகிட 76

## 148. துயர் கெடுதல் எளிது

வாளொளிபுற்றூர்ச் சொல்லிய பாடல்கள் வல்லார் துயர்கெடுதல் எளிதாமே 40

## 149. துயர் தீர்தல்

ஞானசம்பந்தன சொற்றகவுற மொழிபவர் அழிவிலர் துயர்தீருமே 344
பத்துஞ் சொல்ல வல்லார் துயர்தீர்ந்து 205
பத்தும் வல்லவர் சிந்தையிற் றுயராய தீர்வரே 164

## 150. துயர் நீக்கம்

ஞானசம்பந்தன்...தமிழ்மாலை வல்லவர் தந்துயர் நீங்கி 203

## 151. துயர் போதல்

பாடல்பத்தும் வல்லார் தந்துயர் போகி 100

## 152. துயர் வீடு (விடுதலை)

ஐயாற்றைச் சொலுமாலை வல்லார் துயர் வீடே 36

## 153. துயரம் இல்லை

பாடலிவை பத்துஞ் சொல்லுவார்க்குங் கேட்பார்க்குந் துயரம் இல்லையே 192

## 154. துன்பம் அடையா

அனேகதங்காவதம் சொல்ல நல்ல அடையும் அடையா சுடுதுன்பமே 141

## 155. துன்பம் துடைப்பார்

வழிபாடிவை பத்தும் வாய்க்கச் சொல்லுதல் கேட்டல் வல்லார் துன்பந் துடைப்பாரே 105

## 156. தூநெறி பெறுதல்

தமிழாற் சொன்ன ஏத்துவார் வினைநீங்கிப் போய்த் துன்புறுந் துயரமிலாத் தூநெறி பெறுவார்களே 214

## 157. தூயர்

சொற்றெரி யொருபது மறிபவர் துயரிலர் தூயரே 345

## 158. தேசினர்

செந்தமிழ் பத்தும் வல்லார் திருவொடு புகழ்மல்கு தேசினரே 109

## 159. தேவர் (வந்து நமது) சிந்தையில் இருத்தல்

மாலைகொண் டாலவாயி லண்ணலைத் தீயுதீர எண்ணுவார்கள் சிந்தையாவர் தேவரே 310

## 160. தேறுதல் அடைதல்.

பத்தும் வல்லார்மேல் பந்தமாயின பாவம் பாறுதல் தேறுதல் பயனே 229

## 161. நடலை யின்மை

தமிழ்ப் பத்தும் வல்லார் நடலையவை யின்றிப் போய் 261

## 162. நரைதிரை யின்மை

தமிழ்வல்லார் நரைதிரை யின்றியே 291

## 163. நல்ல அடையும்

அனேகதங்காவதம் சொல்ல நல்ல அடையும் 141

## 164. நல்லர், நல்லவர், நல்லவர்கள், நல்லோர்

சம்பந்தன் வாய்மைத் திவைசொல்ல வல்லோர் நல்லோரே 82

ஞானசம்பந்தன் உரை நல்ல தமிழின் பாடலொடு பாடும் இசைவல்லவர்கள் நல்லர் 327

ஞானசம்பந்தன் ஒண்மாலை வரைக்குந் தொழில் வல்லவர் நல்லவர் தாமே 30

ஞானசம்பந்தன்......சொன்ன தமிழ்மாலை கோலத்தாற் பாட வல்லார் நல்லாரே 80

ஞானசம்பந்தன் சொன்ன வாய்ந்த இம்மாலைகள் வல்லவர் நல்லர் வானுலகின் மேலே 347

ஞானசம்பந்தன் நற்றமிழ் சொல்ல வல்லவர் நல்லவரே 370

தமிழார் விரகன் வடமார் தமிழ் வல்லவர் நல்லவரே 158

தீப்பிணி யாயின தீரச் சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே 202

பந்தன்மலி செந்தமிழின் மாலைகொடு வேதிகுடி யாதி கழலே சிந்தைசெய வல்லவர்கள் நல்லவர்கள் என்ன நிகழ்வெய்தி 336

பழனத்தை வாயிற் பொலிந்த மாலை பத்தும் வல்லார் நல்லாரே 67

## 165 நல்வினை

(“வினை” பார்க்க.)

## 166. நலங்கோள் சிந்தையராதல்

தமிழிவை வல்லார் நலங்கொள் சிந்தையராகி 230

## 167. நலம் பெறுவர்

ஞானசம்பந்தன் சொன்ன நம்பிநாள் மொழிபவர்க் கில்லையாம் வினை நலம்பெறுவர் தாமே 351

## 168. நலமல்கு சிந்தையர்

பாடல்கள் பத்துஞ் சொல்ல வல்லார்.....................துயர்தீர்ந்து நலமல்கு சிந்தையராகி 205

## 169. நலமிகுவர்

ஒருபதும் நவில்பவர் நிகழ்குல நிலநிறை திருவுரு நிகரில கொடைமிகு சயமகள் புகழ்புவி வளர்வழி யடிமையின் மிகைபுணர்தரநல மிகுவரே 21

## 170. நன்மையர்

கற்றுவல்லார் மிகநலமலி புகழ்மிகு நன்மையர் தாமே 120

## 171. நன்னுல கெய்துவர்

ஞானசம்பந்தனஃது செந்தமிழ்...பேணுதலுரியார் இன்னெடு நன்னுல கெய்துவர் 136

## 172. நன்னெறி எய்துவர்

தமிழிவை வல்லார் நலங்கொள் சிந்தையராகி நன்னெறி யெய்துவர் தாமே 230

பாடல்கள்!..... .....சொல்ல வல்லார் துயர்தீர்ந்து நலமல்கு சிந்தையராகி நன்னெறி யெய்துவர் தாமே 205

## 173. நன்னெறி சேர்வர்

தமிழ்வல்லார் நரைதிரையின்றியே நன்னெறி சேர்வரே 291

## 174. நிலத்து இலராதல்

நின்னை நினைய வல்லவர் இல்லை நீணிலத்தே 128

## 175. நிலம் வழிபாடு செய்யும்

தமிழ்மாலை பத்து நினைவார் வான நிலாவ வல்லர் நிலமெங்கு நின்று வழிபாடு செய்யும் மிகவே 223

## 176. நிலமிசை நிலையிலர்

தமிழ்மாலை வல்லார் வினையாயின நீங்கிப்போய் விண்ணவர் வியனுலகம் நிலையாக முன்னேறுவர் நிலமிசை நிலையிலரே 262

## 177. நிலன்வான் - உடைமை

ஞானசம்பந்தனது சொல் முந்தியிசை செய்து மொழிவார்கள் உடையார்கள் நெடுவான நிலனே 335

## 178. நிலனிடை இனிதமர்வர்

ஒருபதும் மனமகிழ்வொடு பயில்பவர்...மலர்மகள் கலைமகள் சயமகள் இனமலி புகழ்மகள் இசைதர இருநிலனிடை யினிதமர்வரே 20

## 179. நிலனிடை நிகழ்தரு பிறவி பெறுதல்

ஒருபதும் உரியதொ ரிசைகொள உரைசெயும் நீதிப ரவரிரு நிலனிடை நிகழ்தரு பிறவியே 342

## 180. நிறைவளர் நெஞ்சு பெறுதல்

தமிழ்மாலை வல்லவர் தந்துயர் நீங்கி நிறைவளர் நெஞ்சினராகி 203

## 181. நீடுலகத் திருத்தல்

தமிழ்மாலை வல்லவர் தந்துயர் நீங்கி நிறைவளர் நெஞ்சினராகி நீடுலகத் திருப்பாரே 203

## 182. நீடுலகம் ஆள்வர்

சம்பந்தன் சமைத்த பாடல் வழங்கும் இசை கூடும்வகை பாடுமவர் நீடுலகம் ஆள்வர் தாமே 131

## 183. நெஞ்சிருள் நீக்கம்

மாலை தஞ்சமென நின்றிசை மொழிந்த அடியார்கள் தடுமாற்றம் வஞ்சமிலர் நெஞ்சிருளும் நீங்கி 339

## 184. நோய் அடையா

பந்தனது செஞ்சொல் பாடலுடையாரை அடையா பழிகள் நோயே 169

## 185. நோய் இலராதல்

ஞானசம்பந்தன் சொல் சித்தஞ் சேரச் செப்புமாந்தர் தீவினை நோயிலராய் 65

## 186. நோய் களைவார்

மாலை நாவில் ஓத வல்லார் உலகில் உறுநோய் களைவாரே 104

## 187. நோய் சாரா

ஞானசம்பந்தன் தமிழ்வல்லார்க் கருவினைநோய் சாராவே 322

## 188. நோய் பாறும்

ஞானசம்பந்தன் செந்தமிழ் பாட நோய்பிணி பாறுமே 248

## 189. பங்கம்நீங்க

பங்கநீங்கப் பாடவல்ல பத்தர்கள் 47

## 190. பத்த ராதல்

தமிழ்பத்தும் வல்லவர் பத்த ராகுவரே 369
தமிழ்பத்துமிவை வல்லார் நேசமலி பத்தரவர் நின்மலனடிக்கே 168

## 191. பத்துமாதல்

நானுரைத்தன செந்தமிழ் பத்துமே வல்லவர்க்கிவை நற்றமிழ் பத்துமே 373
பந்தனின்னியல் பாடிய பத்துமே பாடவல்லவராயின பத்துமே 372
வாயுரைத்த தமிழ்பத்துமே வல்லவர்க்கு மிவை பத்துமே 374

## 192. பந்தபாசம் அறுத்தல்

ஞானசம்பந்தன் சொல்சிந்தையால் மகிழ்ந்தேத்த வல்லாரெலாம் பந்தபாசம் அறுக்க வல்லார்களே 307

## 193. பந்தம் அறுத்தல்

தமிழ்செப்பிய பத்திவை வல்லார் பந்தமறுத் தோங்குவர் பான்மையினாலே 172

## 194. பந்தம்...பாறுதல்

தமிழ்பத்தும் வல்லார்மேல் பந்தமாயின பாவம் பாறுதல் தேறுதல் பயனே 229

## 195. பரகதி பெறலாம்

பாமாலைப் பாடலாயின பாடுமின் பத்தர்கள் பரகதி பெறலாமே 243

## 196. பரமனடி சேர்தல்

இசைபாடிய மாந்தர் பரமன்னடி சேர்ந்து......பொலிவாரே 2

## 197. பரமனைப் பணிதல்

சம்பந்தன் செந்தமிழ் வல்லவா பரமனைப் பணிவாரே 238

## 198. பரலோகத் திருத்தல்

ஞானசம்பந்தன் பண்ணாருந் தமிழ்வல்லார் பரலோகத் திருப்பாரே 323
ஞானசம்பந்தன்...பாடல்கள் பத்தும் வல்லார் பரலோகத் திருப்பாரே 106

## 199. பரலோகம் எளிதாதல்

ஞானசம்பந்தன் உரை நல்ல தமிழின் பாடலொடு பாடுமிசை வல்லவர்கள் நல்லர் பரலோகம் எளிதே 327
ஞானசம்பந்தன் மொழிகள் பாடவல பத்தரவ ரெத்திசையும் ஆள்வர் பரலோகம் எளிதே 337
பந்தனுரை சிந்தைசெய வந்தவினை நைந்து பரலோக மெளிதே 326

## 200. பரலோகம் சேர்தல்

ஞானசம்பந்தன் பாடல் பத்தும் வல்லார் பரலோகஞ் சேர்வாரே 186

## 201. பரலோகம் பிரியாமை

தமிழ்மாலை பன்னுள் பாடி யாடப் பிரியார் பரலோகந் தானே 74

## 202. பழி அறும்

ஞானசம்பந்தன்...ஒண்டமிழ் வல்லார்க் கறும்பழி 383

## 203. பழி இலர்

ஞானசம்பந்தன்...பண்ணியல் பாடல் வல்லார்கள் பழியொடு பாவமிலாரே 39
ஞானசம்பந்தன்...பண்ணுலா மருந்தமிழ் பாடுவா ராடுவார் பழியிலரே 348
ஞானசம்பந்தன்.. பாடல் பயில்வார் பழியொடு பாவமிலாரே 204
ஞானசம்பந்தன்...பாடல் வல் வித்தகத்தால் மொழிவார் பழியிலரிம் மண்ணின் மேலே 208
ஞானசம்பந்தன செந்தமிழ் பாடிய அவர் பழியிலரே 357
ஞானசம்பந்தன நற்றமிழ் பாடவல்லார் பழியிலரே 353

## 204. பழிகள் அடையா

பந்தனது செஞ்சொற்பாட லுடையாரை அடையா பழிகள் 169

## 205. பழிநீங்கும்

ஞானசம்பந்தன் சொற்பகரும் பழிநீங்கவே 305

## 206. பழிபாவம் அறும்

தமிழ்வல்லார்க்கு அறும் பழிபாவம் 383

## 207. பழிபோம்

ஞானசம்பந்தன் சொன்ன தமிழ்பாட வல்லார் பழிபோகுமே 253
ஞானசம்பந்தன் படிகொள் பாடல் வல்லவர் தம்மேற் பழிபோமே 102
ஞானசம்பந்தன் பாமரு பாடல்பத்தும் வல்லார்மேற் பழிபோமே 101

## 208. பழியில் புகழ்

சம்பந்தன்...தமிழ்வல்லோர்...பாசந்தனை யற்றுப் பழியில் புகழாரே 81

## 209. பழியோடு பாவம் இலர்

பண்ணியல் பாடல் வல்லார்கள் பழியொடு பாவமிலாரே 39
பாடல் பயில்வார் பழியொடு பாவமிலாரே 204

## 210. பழுதின்மை

பழுதில் சம்பந்தன் மொழிகள் பத்துமே 90

## 211. பாக்கியவாளர்

சம்பந்தன் மதித்த இப்பாடல் வல்லவர் பாக்கிய வாளரே 366

## 212. பாசம் அறுதல்

சம்பந்தன்...தமிழ்வல்லோர் பெருநீருலகத்துப் பாசந்தனை யற்று 81

## 213. பார் முழுதாள்பவர்

ஞானசம்பந்தன்...பாடல்கள் பத்தும் வல்லார் பார்முழுதாள்பவரே 358

## 214. பாரோடுவிண் பரிபாலகர்

ஞானசம்பந்தன்...பண்ணியல் பாடல் வல்லார்கள் இந்தப் பாரொடு விண் பரிபாலகரே 4

## 215. பாவ நாசம்

சம்பந்தன் பயில்வார்க் கினிய பாடல் வல்லார் பாவநாசமே 71
ஞானசம்பந்தன்...சொன்னசொற் பாவநாச மாதலால் 236

## 216. பாவம் அடையாது

தமிழ்மாலைக ளிசையோ டிவைபத்தும் பகரும்மடி யவர்கட்கிடர் பாவம் அடையாவே 12

## 217. பாவும் அறும்

ஞானசம்பந்தன்......ஒண்டமிழ் வல்லார்க் கறும்பழி பாவம் 383

## 218. பாவம் இல்லை

ஞானசம்பந்தன்...ஈரைந்து மாலையு மியலுமாப் பண்ணினூற் பாடுவார்க்
கில்லையாம் பாவமே 292
ஞானசம்பந்தன் சொல் இட்டமாப் பாடுவார்க் கில்லையாம் பாவமே 294
ஞானசம்பந்தன் சொல் படியிவை பாடிநின் ருடவல்லார்க் கில்லை பாவமே 270
ஞானசம்பந்தன் சொல் பாடலிவை வல்லார்க் கில்லையாம் பாவமே 178
ஞானசம்பந்தன் தமிழ்மாலை...பண்ணூரப் பாடவல்லார்க்கில்லை பாவமே 152
ஞான்சம்பந்தன்...தமிழ்வல்லார்க் கில்லையாம் பாவமே 288
ஞானசம்பந்தன் தன்பாடலிவை வல்லார்க் கில்லையாம் பாவமே 180
ஞானசம்பந்தன்...பத்திவை பண்கொளப் பாடவல்லார்க்கில்லை பாவமே 149
ஞானசம்பந்தன் பாடல் வல்லார்களுக் கில்லை பாவமே 281
ஞானசம்பந்தன் மாலை வல்லார்க் கில்லை பாவமே 306
ஞானசம்பந்தன் வாய்ப் பன்னு பாடல் வல்லார்க்கில்லை பாவமே 303
ஞானசம்பந்தன செந்தமிழ் பானலார் மொழிவல்லார்க் கில்லையாம் பாவமே 293
ஞானசம்பந்தன சொல்லிவை பாடுவார்க் கில்லை பாவமே 58
ஞானசம்பந்தன பாட்டகத் திவைவலார்க் கில்லையாம் பாவமே 284
ஞானசம்பந்தன பாடல் பத்திவை வல்லார்க் கில்லையாம் பாவமே 290
ஞானசம்பந்தன பாடல் பத்தும் வல்லார்க் கில்லையாம் பாவமே 283

## 219. பாவம் இலர்

ஞானசம்பந்தன்......அன்புறுமாலை பரவிடுந் தொழில்வல்லவர் அல்லலும்
பாவமும் இலர் தாமே 246
ஞானசம்பந்தன்...பாடல் வல்லார்கள் பழியொடு பாவமிலாரே 39
ஞானசம்பந்தன பாடல் பயில்வார் பழியொடு பாவம் இலாரே 204

## 220. பாவம் இலாதவர்

ஞானசம்பந்தன சொன்ன பகர்வார்...பாவமிலாதவரே 155

## 211. பாவம் கேடும்

ஞானசம்பந்தன் சொற் பாடி யாடக் கெடும் பாவமே 148
ஞானசம்பந்தன் சொன்ன தமிழ் பாடியாடக் கெடும் பாவமே 251
ஞானசம்பந்தன செந்தமிழ் பாடியாடக் கெடும் பாவமே 266

## 222. பாவம் பறையும்

சம்பந்தன்...பரவிய தமிழ்சொல்லப் பறையுமெய்ப் பாவமே 287
ஞானசம்பந்தன் சொல் பண்ணிய இவைசொலப் பறையுமெய்ப் பாவமே 285
ஞானசம்பந்தன் சொன்ன பாடல் பத்தும் பாடவல்லார் பாவம் பறையுமே 52
ஞானசம்பந்தன் பண்ணிய தமிழ்சொலப் பறையும் பாவமே 278
ஞானசம்பந்தன் பத்தும் பாடப் பறையும் பாவமே 29
ஞானசம்பந்தன் பாடல் பத்தும் பாட நம் பாவம் பறையுமே 99

## 223. பாவம் பாறும்

ஞானசம்பந்தன்......தண்டமிழ் பத்தும் வல்லார்மேல் பந்தமாயின பாவம் பாறுதல் தேறுதல் பயனே 229
ஞானசம்பந்தன தமிழ்வல்லார் பாவமான பாறுமே 235

## 224. பிணி அணைவிலர்

ஞானசம்பந்தனஃது செந்தமிழ்...பேணுதலுரியார்...இடர்பிணி துயரணைவ் விலரே 136

## 225. பிணி அறுதல்

ஞானன்...தமிழ்வல்லார் பெரும்பிணி மருங்கற 166

## 226. பிணி இலர்

இசையொடுபாடல் இவைசொல வல்லவர் பிணியிலர் தாமே 78

## 227. பிணி நீக்கம்

மாலை நன்மையா லுரைசெய்து நவில்வார் ஞானசம்பந்தத் துறுபிணி நீங்கி 376

## 228. பிணி பாறும்

ஞானசம்பந்தன் செந்தமிழ் பாட நோய்பிணி பாறுமே 248

## 229. பிணி மருவாது

தமிழால்...எம்மானை வணங்கியேத்த மருவா பிணிதானே 363

## 230. பிணி வாராது

சம்பந்தன்......செஞ்சொன்மாலை செப்பும் அடியார்மேல் வாரா பிணிகள் 68

## 231. பிறப்பு அறுத்தல், அறுதல்

மாலைபுனைந்த பத்தும் பரவிப் புகழ்ந்தேத்த ஐயுறவில்லை பிறப்பறுத்தல் 362
மாலையிவை பத்துரைப்பார் உலகத்துக் கருவா ரிடும்பைப் பிறப்பதறுத்து 72
வீரட்டத்தானை...புனைபாடல் வல்லார்க் கறுநீடவலம் அறும் பிறப்புத் தானே 134
நின்னை நினைய வல்லவர் இல்லை நீணிலத்தே 128

## 232. பிறப்பு இல்லை

மாலை நன்மையா லுரைசெய்து நவில்வார் ஊன சம்பந்தத் துறுபிணி நீங்கி 'யுள்ளமும் ஒருவழிக்கொண்டு வானிடை வாழ்வர் மண் மிசைப் பிறவார் மற்றிதற் காணையு நமதே 376

## 233. பிறப்பு நீக்கம்

ஞானன்...தமிழ்வல்லார் பெரும்பிணி மருங்கற ஒருங்குவர் பிறப்பே 166

## 234. பிறப்பு - மறுபிறப்பு இல்லை

(" மறுபிறப்பு "என்பதைப் பார்க்க)

## 235. பிறப்பை - மறத்தல்

ஞானசம்பந்தன் தமிழ்வலார் மாற்றில் செல்வர் மறப்பர் பிறப்பையே 308

## 236. பிறவா வகை

தமிழ்மாலை செவிக்கினிதாக வல்லார்க் கெளிதாம் பிறவாவகை 31

## 237. பிறவி - நிலனிடை

இசைகொள உரைசெயும் நீதியரவர் இருநிலனிடை நிகழ்தரு பிறவியே 342

## 238. புகழ் அடைதல் - விண்ணும் நிலனும்

மாலை வைக லேத்துவார் விண்ணுந் நிலனுமாய் விளங்கும் புகழாரே 86

## 239. புகழ் உடையார்

தமிழ் பரவித் தொழும் அடியாரவர் என்றும் விளங்கும் புகழதனோடுயர் விண்ணும் உடையாரே 13

## 240. புகழ் ஏலும்

ஏத்த வல்லாருக் கேலும் புகழ் 182

## 241. புகழ் கொளவலர்

செந்தமிழ் பத்தும் சிந்தையட் சேர்க்க வல்லார்போய்ப் பொய்யில் வானவ ரோடும் புகவலர் கொளவலர் புகழே 227

## 242. புகழ் தாங்குதல்

ஞானசம்பந்தன்...தமிழ்மாலைகள் வல்லவர் தாங்குவர் புகழாலே 245
ஞானசம்பந்தன் நல்ல தன்னிசையாற் சொன்ன மாலைபத்தும் தாங்க வல்லார் புகழ் தாங்குவாரே 5

## 243. புகழ் நிறையும்

தமிழ் விரகனதுரை......ஒருபதும் நவில்பவர்......புகழ்புவி......புணர்தர நலமிகுவரே 21
பந்தன் குன்றுத்தமிழ் சொல்லக் குறைவின்றி நிறைபுகழே 18

## 244. புகழ் - பழியில் புகழ்

("பழியில் புகழ்"—பார்க்க).

## 245. புகழ் - பெரும்புகழோடு பிரியாமை

மாலையீரைந்தும் இவை வல்லவர் உருத்திர ரெனப்பெற் றமரலோக மிகவாழ்வர் பிரியாரவர் பெரும்புகழொடே 329

## 246. புகழ் மகள் பேறல்

ஒருபதும் மனமகிழ் வொடுபயில்பவர்.........எழின் மலர்மகள் கலைமகள் சயமகள் இனமலி புகழ்மகள் இசைதர இருநிலனிடை யினிதமர்வரே 20

## 247. புகழ்மல்கு தேசு

செந்தமிழ் பத்தும் வல்லார் திருவொடு புகழ்மல்கு தேசினரே 109

## 248. புகழ்மிகு நன்மை

தமிழிவை கற்று வல்லார் மிக நலமலி புகழ்மிகு நன்மையர் தாமே 120

## 249. புகழ் விளங்கும்

ஞானசம்பந்தன பாடல்வல்லார் வியன்ஞாலமெல்லாம் விளங்கும் புகழே 154

## 250. புகழாம்

கச்சிக் கம்பம் மெச்சுஞ்சொல்லை நச்சும், புகழே 299

## 251. புகழாளர் - தொல்புகழாளர்

ஞானசம்பந்தன் சொல்...இசைபாடுவார் விண்ணு மண்ணும் விரிகின்ற தொல்புக ழாளரே 211

## 252. புகழினர் - புகழ் கிளரொளியினர்

தமிழிவை பரவ வல்லவர் வினைகெட மலிபுகழொடு கிளரொளியினரே 121

## 253. புகழுடன் பேரின்பம்

கள்ளிலேத்தப் புகழோடும் பேரின்பம் புகுதுமன்றே 119

## 254. புகழோங்கிப் பொலிதல்

தமிழ்மாலை பற்றியென்றும் இசைபாடிய மாந்தர் பரமன் னடிசேர்ந்து குற்றமின்றிக் குறைபா டொழியாப் புகழோங்கிப் பொலிவாரே 2

## 255. புகழோங்குதல்

பத்தும் வல்லார் சீரினார் புகழோங்கி 133

## 256. புகழோ டோங்குதல்

தமிழிவை பத்தும் வல்லார் உலகுறு புகழினோ டோங்குவரே 110

## 257. புண்ணியர் - புண்ணியராதல்

சம்பந்தன் மொழிபத்தும் இவை வல்லார் பொன்னடைந்தார் போகங்கள் பல அடைந்தார் புண்ணியரே 176

ஞானசம்பந்தன் தமிழ்மாலை...பத்தும் இவை வல்லார் புண்ணியராய் 103

ஞானசம்பந்தன் பண்ணிய செந்தமிழ் பத்தும் வல்லவர் புண்ணியர் 275

## 258. புவலோகத்து இருத்தல்

தமிழ்மாலை யிவைவல்லார் பொருவாகப் புக்கிருப்பார் புவலோகத்தே 150

## 259. பேரின்பம் புகுதல்

கள்ளிலேத்தப் புகழோடும் பேரின்பம் புகுதுமன்றே 119

## 260. பொய்த்தவம் பொறி நீங்க

ஞானசம்பந்தன்...மாலைகள் பொய்த்தவம் பொறிநீங்க இன்னிசை போற் செய்யும் மெய்ம் மாந்தரே 295-10

## 261. பொருள்

"உயர் பொருள்"—என்பதைப் பார்க்க.

## 262. பொன் அடைதல்

சம்பந்தன் மொழிபத்தும் இவைவல்லார் பொன்னடைந்தார் 176

## 263. பொன்னுலகம் பெறுவர்

ஞானசம்பந்தன்.........தமிழ்பத்தும் இசையாலுரை செய்வார் பெறுவர் பொன்னுலகமே 328

## 264. பொன்னுலகில் பொலிதல்

மாலைபத்திவை பாடவல்லார்கள் பூமலி வானவரோடும் பொன்னுலகிற் பொலிவாரே 43

## 265. போகங்கள் பல அடைதல்

மொழிபத்துமிவை வல்லார் பொன்னடைந்தார் போகங்கள் பல அடைந்தார் 176

## 266. போகம் உறுவர்

செந்தமிழ்...பேணுதலுரியார்...நன்னுல கெய்துவர் எய்திய போகமும் உறுவர்கள் 136

## 267. மண்பொலிய வாழ்தல்

தமிழ்மாலை பாடிய பத்திவை வல்லார் மண்பொலிய வாழ்ந்தவர் போய் 184

## 268. மண் மதியாமை

பாடல்பத்தும் பயின்றார் வினைபோகி மண்மதியாதுபோய் 360

## 269. மண்மிசைப் பிறவார்

மாலை நன்மையாலுரைசெய்து நவில்வார் ஞானசம்பந்தத் துறுபிணி நீங்கி யுள்ளமும் ஒருவழிக்கொண்டு வானிடை வாழ்வர் மண்மிசைப் பிறவார் மற்றிதற் காணையு நமதே 376

## 270. மதி யுடையவராதல்

ஒருபதுமுடன் மருவிய மனம் உடையவர் மதியுடையவர் 19

## 271. மலம் அழியும்

உலகில் இழுகுமலம் அழியும்வகை கழுவும் உரை 325-12

272. மலர்மகள், கலைமகள், சயமகள், புகழ்மகள் துணைபெறல்

ஒருபதும் மனமகிழ்வொடு பயில்பவர் எழின்மலர்மகள் கலைமகள் சயமகள் இனமலி புகழ்மகள் இசைதர இருநிலனிடை யினிதமர்வரே 20

273. மலராள் துணைவராதல்

இவைவல்லார் தூமலராள் துணைவராகி...........முக்கணுனடி சேர முயல்கின்றாரே 129

274. மறுபிறப்பு இல்லை

சம்பந்தன் சொல் மடியாது சொல்லவல்லார்க் கில்லையாம் மறுபிறப்பே 179

275. மானமாக்கும்

ஞானசம்பந்தன் சொல்லிய நற்றமிழ் மானமாக்கும் மகிழ்ந்துரை செய்யவே 301

276. மூவுலகும் பெறுதல்

ஞானசம்பந்தன் தமிழார மொழிவார்கள் மூவுலகும் பெறுவார்களே 147

277. மொழிதகைய

தமிழ்விரகன் வழிமொழிகள் மொழிதகையவே 325-12

278. யோகம் தமது ஆதல்

